DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

*******

IN THE COURT OF DISTRICT MUNSIF–CUM–JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| CC.No. | 1116/2023 |
| Prosecution: | அ.சா.1 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | மோகன் |
| **Father Name** | ~ | செல்வராஜ் |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day **of Dt.21.08.2025.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். எனது மைத்துனர் அஜித் மற்றும் அவரது மனைவி ஆகியோர் மூலமாக எதிரியை எனக்கு தெரியும் என்றால் இல்லை. மேற்படி அஜித் மூலமாக தான் எதிரி என்னிடமிருந்து தொகை பெற்றார் என்றாலும் அத்தகையை அஜித்தின் மனைவியின் வங்கி கணக்கிற்கு எதிர் செலுத்தி விட்டார் என்றால் சரியல்ல. எதிரிக்கு திரிசூலத்தைச் சேர்ந்த மீன்ராஜ் என்பவர் முன்னிலையில் தான் தொகை கொடுக்கப்பட்டது என்றால் இல்லை. எதிரி என்னிடமிருந்து 2 லட்சத்து 20 ஆயிரம் தொகை பெறவில்லை என்றாலும் அவ்வாறு பெற்று இருந்தால் காசோலை தொகை நிரப்பப்படும் போது அதே பேனா நிற மையினால் எனது பெயரும் எழுதப்பட்டிருக்கும் என்றாலும் ஆனால் காசோலையில் எனது பெயர்

வேறு பேனா மையினால் எழுதப்பட்டுள்ளதால் மேற்படி தவறாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

நான் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வருகிறேன் என்றாலும் அதன் அடிப்படையில் பல்வேறு நபர்களுக்கு கடன் கொடுத்து அது தொடர்பாக என் மீது வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை. எதிரி என்னிடமிருந்து 20000 மட்டும் தான் கடன் பெற்றார் என்றாலும் அந்த கடன் தொகை வட்டியுடன் சேர்த்து 35 ஆயிரம் ஆக எனது உறவினரின் வங்கி கணக்கு மூலமாக அனுப்பி விட்டார் என்றாலும் ஆனால் நான் மேற்படி காசோலையை தவறாக பயன்படுத்தி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு முறையாக எதிரிக்கு கிடைக்கப்பெற்று இருந்தால் அது தொடர்பாக உரிய முறையில் எதிரி எனக்கு பதில் அளித்து அனுப்பி இருப்பார் என்றாலும் நான் உரிய முறையில் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு காசோலை மதிப்பு மறுக்கப்பட்டது குறித்து உரிய அறிவிப்பு தெரிவிக்கப்படவில்லை என்றாலும் அவ்வாறு தெரிவிக்கப்பட்டிருந்தால் எதிரி உரிய நடவடிக்கை எடுத்திருப்பார் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.
S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.